# தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்

## Tamil Study Centre, Homebush Inc.

**Postal Address: P O Box 4019, Homebush NSW 2140**

**www.tsch.org.au** **info@tsch.org.au**


# அரையாண்டுப் பரீட்சை 2021

ஆண்டு: 8 திகதி: 12.06.2021

நேரம்: 2 மணித்தியாலங்கள்

ஆசிரியர்: திருமதி. மாலினி சோமாஸ்கந்தன்

மாணவர் பெயர்: ______________________________

| **வினாக்கள்** | **வினா புள்ளி** | **பெற்ற புள்ளி** |
|---|---|---|
| வினா 1 | 20 | |
| வினா 2 | 10 | |
| வினா 3 | 20 | |
| வினா 4 | 15 | |
| வினா 5 | 10 | |
| வினா 6 | 25 | |
| **மொத்தப் புள்ளிகள்** | **100** | |

## தரப்பட்ட உரைப்பகுதியை வாசித்து வினாக்களுக்கு பதில் எழுதுக

உலக வாழ்வில் அனைத்துக் கருமங்களும் பிரதிபலன் கருதியே நடைபெறுகின்றன. மனித வாழ்வில் இதனை நாம் பெரிதும் காணலாம். ஆனால் வாழையோ எவ்வித பிரதிபலனும் கருதாது மனித வர்க்கத்துக்குப் பயன் தருகிறது. இதனால்தான் வாழைமரம் மக்களின் போற்றுதலுக்கும் பாராட்டுதலுக்கும் உள்ளாகிறது. “வாழையடி வாழையென வாழ்க!” என வாழ்த்துதலை நாம் அறிவோம். வேறு எந்த மரத்திற்கும் இல்லாத சிறப்பு வாழைக்கு உண்டென்றால் மிகையாகாது. மனித வாழ்வில் வாழைக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. மங்கள வைபவங்களிலும், அமங்கல வைபவங்களிலும் வாழை முக்கிய இடம் பெறுகின்றது. அதற்குக் காரணம் அதன் பிரதிபலன் கருதாக் கொடையே எனலாம். வாழையைப் பொறுத்த வரையில் அதன் பயன்கள் பலப்பல. அதன் சகல பாகங்களும் மனிதனுக்குப் பயன்படுகின்றன. மனிதருக்காக அது தன்னையே தியாகம் செய்கிறது. அது பிறருக்காகவே வாழ்கிறது. பிறருக்குப் பயன் தந்து மடிகிறது. வாழையின் தியாகம் மகத்தானது. அது சமூகத்துக்காக தன்னை அர்ப்பணிக்கிறது. இந்த அர்ப்பணிப்பு மனப்பாங்கை மனிதவர்க்கமும் கைக்கொள்ள வேண்டும். மனிதர் வாழையிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டிய நல்லபாடம் இது எனலாம். வாழையிடம் காணப்படும் மற்றோர் பண்பு தலைக்கனம் இல்லாது இருத்தல் ஆகும். எத்தகைய பெரிய குலையை ஈன்ற போதிலும் அதனை தனக்கென கருதாது தன்னைப் பயிரிட்டவனுக்கு உரித்தாக்குகின்றது. இது குறித்து அது தலைக்கனம் கொள்வதில்லை. தன்னையே முற்றுமுழுதாக மனிதருக்கு அர்ப்பணித்தபோதிலும் அது குறித்து பெருமைப் படுவதில்லை. வாழையானது மனிதர்க்கு என்றும் பயன் தருவதை இலட்சியமாகக் கொண்டுள்ளது. இதனாற்றான் தான் அழியும்போது தன் பரம்பரையை உருவாக்கிச் செல்கிறது. இதனாலேயே “வாழையடி வாழை” என்ற சொற்றொடரும் உருவாகியுள்ளது.

“வாழைமரம் படித்ததில்லை கனி கொடுக்க மறந்ததா?
வான்முகிலும் கற்றதில்லை மழை பொழிய மறந்ததா?...” என்னும் கண்ணதாசனின் பாடல்வரிகள் வாழையின் பயன்கருதாப் பண்பை கொடைத்திறனை நமக்கு சுட்டிக் காட்டுகின்றன.

வாழையை பெருமளவில் நடுவதன் மூலம் பெரும் பயன் பெற முடியும். சுருங்கக் கூறின் வாழை தியாகத்தின் சின்னம் எனலாம். அதனிடமிருந்து மக்கள் பெறும் பயன்கள் பல. அவை வாழையின் கொடைத்திறனுக்குச் சான்றாக அமைகின்றன. வாழைஇலை, வாழைப்பூ, வாழைக்காய், வாழைப்பழம், வாழைத்தண்டு போன்றவை எமக்குப் பயன்தருகின்றன.

1) வாழை எப்படி மனித வர்க்கத்திற்கு பயன் தருகிறது?

2) வாழை மக்களுக்காக செய்யும் தியாகங்கள் எவை?

3) எப்படியான வைபவங்களில் மக்களுக்கு பயன்படுகிறது?

4) இப்பகுதியில் கண்ணதாசன் கூறிய பாடல் வரிகள் என்ன?

5) "வாழையடி வாழை" என்ற கூற்றிலிருந்து நீர் அறிந்து கொண்டது என்ன?

6) இப்பந்திக்கு பொருத்தமான தலைப்பு என்ன?

| வினா இல | 2 | புள்ளிகள் | 10 | பக்கம் | 4 |
|---|---|---|---|---|---|

**பின்வரும் துண்டுப் பிரசுரத்தை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக**

பிள்ளைகளே!

கண்களைப் பாதுகாப்பதில் கவனம் செலுத்துகிறீர்களா?

சில அறிவுரைகள் . . . .

நமது கண்களில் தூசி விழுந்ததும்,

- எந்தக்காரணம் கொண்டும் கண்களை கசக்காதீர்கள். கண்பார்வை பறிபோக நீங்களே காரணம் ஆகி விடுவீர்கள்.
- எந்தக் காரணம் கொண்டும் எந்தப் பொருளையாவது கூர்ந்து அவதானிக்கும் போது கண்களில் கண்ணீர் வந்தால் உடனே அச்செயலை நிறுத்தி விடுங்கள்.
- வெளிச்சம் குறைவாக இருக்கும்போது வாசிக்கும் பழக்கம் பார்வைக் கோளாறு உண்டாகக் காரணம் ஆகலாம்.
- வாகனங்களில் பயணம் செய்யும்போது வாசிக்கக் கூடாது. கண்கள் சிரமப் படக் கூடும். இதனால் பார்வைக் கோளாறு ஏற்பட வாய்ப்புண்டு.
- புத்தகம் வாசிக்கும் போது கண்களுக்கு குறைந்தது ஒரு அடி தூரத்தில் புத்தகத்தை வைத்து வாசிப்பதே நல்லது.

சிறு விடயங்களிற்குக் கூட கவனமாக இருந்தால்தான் கண்களை காப்பாற்ற முடியும். சிறுவயதில் இருந்தே நல்ல அறிவுரைகளைப் பின்பற்றுவோம்! கண்களை பாதுகாப்போம்!

கண்களை பாதுகாக்கும் நண்பர்கள் அமைப்பு

1) துண்டுப்பிரசுரம் எதைப் பற்றி விவரிக்கிறது?

2) இப் பிரசுரத்தை வெளியிட்டவர் யார்?

3) கண்களில் தூசு விழுந்தால் என்ன செய்யக்கூடாது?

4) புத்தகம் வாசிக்கும் போது கண்ணுக்கும் புத்தகத்திற்கும் குறைந்தது எவ்வளவு தூரம் இருக்க வேண்டும்?

| வினா இல | 3 | புள்ளிகள் | 20 | பக்கம் | 5 |
|---|---|---|---|---|---|

**பின்வரும் சொற்களைப் பயன்படுத்தி 5 சொற்களுக்குக் குறையாமல் வசனம் எழுதுக**

1) சுயசரிதை

2) சனிக்கிழமை

3) கமகம

4) கலாசாரம்

5) நூல் நிலையம்

6) முத்தமிழ்

7) வாய்மை

8) விமர்சனம்

9) சல சல

10) சுற்றுலா

| வினா இல | 4 | புள்ளிகள் | 15 | பக்கம் | 6 |
|---|---|---|---|---|---|

**கடிதம் எழுதுதல்**

கடந்த வருடம் நியூ சவுத் வேல்ஸ் மாநிலத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு உடமைகளை இழந்த நிலையில் உள்ள பாடசாலை சிறுவர்களுக்கு நிதி சேகரிக்கும் முகமாக மாணவர்களாகிய நீங்கள் பாடசாலையில் ஒரு கலைநிகழ்ச்சியை நடத்துவதற்கு அதிபரின் அனுமதி கோரி ஒரு கடிதம் **70** சொற்களுக்குக் குறையாமல் எழுதுக.

- BLANK PAGE -

| வினா இல | 5 | புள்ளிகள் | 10 | பக்கம் | 9 |
|---|---|---|---|---|---|

எமது தமிழ்ப் பாடசாலையில் இயங்கும் நூல்நிலையத்தால் மாணவர்களாகிய நீங்கள் அடையும் பயன்கள் எவை? (**குறைந்தது இரண்டு பயன்கள் கூறுக**)

கட்டுரை எழுதும் போது அவதானிக்க வேண்டியவை பல. அதில் **மூன்றைக்** கூறுக

| வினா இல | 6 | புள்ளிகள் | 25 | பக்கம் | 10 |
|---|---|---|---|---|---|

**கீழேயுள்ள தலைப்புக்களில் ஒன்றைத் தேர்ந்தெடுத்து 150 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

1 பொங்கல் விழா

2 “அன்சாக்” தினம் (Anzac Day)

3 “தாயிற் சிறந்தொரு கோயிலுமில்லை”